

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (04.04.2025) வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் ஒருங்கிணைந்த பெருங்கழுகுகள் கணக்கெடுப்பு குறித்த அறிக்கையினை வெளியிட்டார். உடன் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர். ராகேஷ் குமார் டோக்ரா, அரசு சிறப்பு செயலாளர்கள் அனுராக் மிஷ்ரா, தெ. ரிட்டோ சிரியாக், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) முனைவர் வி. நாகநாதன், முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் ஆர்.கிருபா சங்கர், மருத்துவ கட்டுப்பாட்டு துறை / தமிழ்நாடு பாருகழுகு பாதுகாப்பு குழு உறுப்பினர் மருத்துவர் ஸ்ரீதர் ஆகியோர் உள்ளனர்.

திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள இடத்தில்

# புதிதாக வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

## பேரவையில் அ.நல்லதம்பி கேள்வி!

**சென்னை, ஏப். 6–**

**திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள இடத்தில் புதிதாக வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் அ.நல்லதம்பி கேள்வி எழுப்பினார்.**



அவருக்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இது தொடர்பான கேள்வியும் பதிலும் வருமாறு:-

**அ.நல்லதம்பி** : நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சியிலுள்ள பழைய பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கே.என். நேரு:** திருத்திய விடையை சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 93,088. சேர்மன் பழனிச்சாமி சாலையில் இயங்கி வந்த பழைய பேருந்து நிலையம் 1961 ஆம் ஆண்டு அப்போது புதிதாக கட்டப்பட்ட பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டதால், 7,021 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடம் காலி ஏற்பட்டது. அக்காலியிடத்தில் புதிதாக வணிக வளாகம் கட்ட திட்டமிடப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**அ.நல்லதம்பி:** திருப்பத்தூர் நகராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் ரூ.5½ கோடி மதிப்பீட்டிலும், புதிதாக இணைக்கப்பட்டுள்ள வார்டுகளுக்கு குடிநீர் பணி விரிவாக்கம் செய்திட ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடும், அதேப்போல, திருப்பத்தூர் பெரிய ஏரிக்கு ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தில் ரூ.1 கோடி நிதி ஒதுக்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினை, பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாகம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட தலைநகரமாக திருப்பத்தூர் விளங்குவதால் பொதுமக்கள் அதிகரித்து வருகின்ற சூழலில் பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலுள்ள இந்த இடத்தில் நவீன வசதிகளுடன்கூடிய வணிக வளாகம் அமைத்தால், வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வசதியாகவும், நகராட்சிக்கு வருவாய் ஈட்டுவதாகவும் அமையும். ஆகவே, இந்தப் பணியினை இந்த ஆண்டே செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** ஏற்கெனவே திருப்பத்தூர் நகராட்சியில் 5 வணிக வளாகங்கள் இருக்கின்றன; 263 கடைகள் இருக்கின்றன. அதன்மூலம் நகராட்சிக்கு வருடந்தோறும் இரண்டரை கோடி ரூபாய் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. மேலும், தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையத்தில் ரூ.53 இலட்சம் மூலதன மானிய நிதியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு திருப்பத்தூர் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டிற்காக ரூ.3 கோடியும், பூங்கா மேம்பாட்டிற்காக ரூ.25 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வணிக வளாகம் இந்த ஆண்டு கட்டுவதற்குரிய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் முதலமைச்சர் அவர்கள் மூலமாக நிதி பெறப்பட்டு, நிச்சயமாக இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பத்தூர் நகராட்சிக்கு மட்டும் கிட்டத்தட்ட இந்த 4 ஆண்டுக் காலத்தில் மட்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற தொகை 70 கோடியே 11 இலட்சம் ரூபாய் திருப்பத்தூர் நகராட்சிக்கு மட்டும் நம்முடைய தளபதி அவர்களுடைய ஆட்சியில் இந்த 4 ஆண்டுக் காலத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வணிக வளாகமும் அவர்களுக்கு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


**அ.நல்லதம்பி:** திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் வார்டு எண் 11, 21, 24, 36 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட *Abdul Malik street*, *Poora masjid* தெரு, *Georgepet* பகுதிகளில் ஏறத்தாழ 15 வார்டுகளில் மழை நீர், வெள்ள நீர் வெளியேற கால்வாய் இல்லாததால் மழை வெள்ளம் தெருக்களில் தேங்கி வடியாத நிலையில் பொதுமக்கள் அவதிப்பட்டு, நோய் தொற்றும் அபாய நிலையில் ஏற்படுகிறது. மழை வெள்ளக் கால்வாய் அமைத்தால் ஏறத்தாழ 30 ஆயிரம் மக்கள் பயன்பெறுகின்ற இந்தத் திட்டத்தை, இதற்கான மதிப்பீடுகளை, அமைச்சர் அவர்களிடம் நேரில் கோரிக்கை மனுவும் அளித்துள்ளேன். இந்தத் திட்டத்தை மழைநீர் வெள்ள நீர் கால்வாய், வடிகால்வாய் அமைத்துத் தருவார்களா எனக் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** திருப்பத்தூர் நகராட்சியில் ரூ.48.28 கோடி மதிப்பீட்டில் 67.48 கி.மீ. நீளத்திற்கு 460 சாலைகள் எடுக்கப்பட்டு, 436 பணிகள் முடிக்கப்பட்டு 24 பணிகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் ரூ.70 கோடியில் அங்கே திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. சாலைகள் புதிதாக போடுவதற்காக அவர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, மழைநீர் வடிகாலும் கட்டப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நிதிநிலைக்கேற்ப இந்த ஆண்டு ரூ.3,750 கோடி சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டு, மழைநீர் வடிகாலுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூ.640 கோடி வழங்கியிருக்கிறார்கள். அதில் எந்தெந்த பணிகளுக்கு முன்னுரிமை தந்து எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதிலே ஏதாவது மீதமிருக்குமானால் திருப்பத்தூர் நகராட்சியிலே இந்த ஆண்டு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நா. புகழேந்தி
### ஏப்ரல் 6 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் கிளைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியப் பொறுப்பாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட அவைத்தலைவர், பின்னர் இரண்டு முறை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்ற தலைவராவும் – ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“மக்களோடு மக்களாக வாழ்ந்த புகழேந்தி அவர்களது மறைவு, விக்கிரவாண்டி தொகுதிக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் மட்டுமின்றி, கழகத்திற்கும் பேரிழப்பாகும்” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மதுரை மார்க்சிய பொதுவுடமை கட்சியின் கருத்தரங்கத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினின் பேருரை அதிர்வலைகளை உருவாக்கியது!

திராவிட மாடல் ஆட்சியை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்று இந்தியா முழுமையுமுள்ள அனைத்து மக்களையும் தமிழ்நாட்டை நோக்கி ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்க்க வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3/4/2025 ஆம் நாள் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டு நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாக மாநில சுயாட்சி குறித்த கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டு 3/4/2025ம் நாள் மாலை 6:00 மணிக்கு ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு கேரள முதலமைச்சர் பினராய் விஜயன் அவர்களும், கர்நாடக உயர் கல்வித் துறை அமைச்சரும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய முக்கிய தலைவர்களில் ஒருவரான பிரகாஷ் காரத், முன்னாள் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பாலகிருஷ்ணன், இன்றைய மாநில செயலாளர் சண்முகம் அவர்களும், மாவட்டச் செயலாளர் கணேசன் அகியவர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழக முதல்வர் தன் உரையின் தொடக்கத்தில், பொதுவுடைமை சித்தாந்தத்தின் மூலவர் காரல்மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் திருஉருவச்சிலை நிறுவுவதற்கு தமிழக சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, இந்த நிகழ்ச்சியிலே, தான் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும்,எனது பெயரும் ஸ்டாலின் என்பதை பொருள் பொதிந்த மகிழ்ச்சியுடன் கருத்தரங்கில் தெரிவித்தவுடன், அரங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் அரங்கம் அதிர்ந்திட கரவொலி எழுப்பினார்கள்! மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுவுடமை இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் உள்ள சித்தாந்த ஒற்றுமையினையும், நெருக்கத்தையும், தொடர்ந்து கொண்டிருக்கும் உறவினையும் வெளிப்படுத்தி மகிழ்ந்தார்கள் என்றால் அதற்கு காரணம் திராவிட இயக்கமும், பொதுவுடமை இயக்கமும் தந்தை பெரியார் காலம் தொடங்கி, பேரறிஞர் அண்ணா காலம், முத்தமிழறிஞர் கலைஞரின் காலம், அவரைத் தொடர்ந்து நான்காவது தலைமுறையாக முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தொடர்கிறது, இனியும் கால இடைவெளியின்றி உறவு தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை என்பதன் வெளிப்பாடுதான்.

தந்தை பெரியார் 1925 -26ல் சுயமரியாதை இயக்கம் கண்ட பொழுது, சிந்தனை சிற்பி சிங்காரவேலர், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜீவா ஆகியவர்கள் சமதர்ம, சுயமரியாதைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர்களாய் தந்தை பெரியாருடன் இணைந்து, தாங்கள் ஏற்றுக்கொண்ட கோட்பாடுகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் சென்றார்கள் என்பது மறக்கவியலாத வரலாற்று பதிவுகளாகும்.

மேலும், தந்தை பெரியாரோடு இணைந்து பணியாற்றினார் என்பது திராவிட இயக்க வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட செய்தியாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த பேறறிஞர் அண்ணா அவர்கள், தான் பயின்ற சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ஒன்றியத்தின் செயலாளராக இருந்தபொழுது 1932ம் ஆண்டு கல்லூரியில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு, “மாஸ்கோவில் மக்கள் எழுச்சிப் பேரணி” (Mascow Mob Parade) என்ற கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதிப் பரிசும் பெற்றார் என்றால் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே பொதுவுடமை இலட்சியங்களின் மீது எந்த அளவிற்கு பற்று கொண்டவராக இருந்தார் என்பதும், அது மட்டுமல்ல எந்த அளவிற்கு பொதுவுடமை சித்தாந்தங்களை அறிந்து வைத்திருந்தார் என்பதும் கட்டுரையைப் படிப்போரை வியப்பில் ஆழ்த்தும்! பொதுவுடமை சித்தாந்தத்திற்கு கட்டுரையின் தொடக்கத்திலேயே விளக்கம் தருகிறார். “கம்யூனிசம் என்பது ‘லெனினிசம்’ ஆம்! லெனினிசம் என்பது நடைமுறைக்கு ஏதுவான மார்க்சியம் என்பதாகும் என்று குறிப்பிடுகிறார். (Communism is Lininism, Leninism is applied Marxism)

சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவராக படித்துக் கொண்டிருந்த பொழுது பேரறிஞர் அண்ணா எந்த அளவிற்கு பொதுவுடமை கருத்துக்களில் ஆழ்ந்த படிப்பறிவும், சிந்தனையும் இருந்துள்ளது என்பதை எண்ணும்போது நமக்கே நம்மை அறியாமல் ஓர் பிரமிப்பை ஏற்படுத்துகிறது . பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாருடன் இணைந்து பணியாற்றிய பொழுதும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தை 1949 செப்டம்பர் திங்களில் தொடங்கிய காலகட்டத்திலும், அரசு பொறுப்பில் இருந்தக் காலகட்டத்திலும், பொதுவுடமைக் கோட்பாடுகளை உள்ளடக்கிய சட்டங்களையும், திட்டங்களையும்தான் சாமானிய மக்களுக்காக உருவாக்கினார் என்பது அனைவரும் அறிந்த செய்திதான். என் வாழ்நாளில் கண்டதும், கொண்டதுமான ஒரே தலைவர் தந்தை பெரியார்தான் என்று பல முறை குறிப்பிட்டுள்ளார்கள். தந்தை பெரியார் சோவியத் ரஷ்யா சென்ற பொழுது அங்குள்ள பொதுவுடமை ஆட்சி முறையையும், கூட்டுசமூக வாழ்க்கையையும் கண்டுவியந்து பாராட்டி அங்கேயே குடியுரிமை கூட பெற்றிட வேண்டும் என தந்தை பெரியார் விரும்பினார் என்ற செய்திகளும் வரலாற்றில் பதிவாகியுள்ளது. சோவியத் ரஷ்யாவிற்கு சென்று திரும்பிய தந்தை பெரியார், பின்னர் தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு “ருஷ்யா”, “மாஸ்கோ” என்றெல்லாம் பெயர் சூட்டினார்கள். இதைக்கண்ட ஆத்தீகர்கள் இப்படி ரஷ்ய நாட்டின் நகரங்களின் பெயர்களை ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் சூட்டலாமா? என்று கேட்ட நேரத்தில், தந்தை பெரியார் உடன் மிகச் சரியாக, கேள்வி கேட்டவர்கள் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு பதில் சொன்னார். “நீங்களெல்லாம் “சிதம்பரம்”, “பழனி” என்று பெயர் சூட்டிக் கொள்ளும் பொழுது, ‘ருஷ்யா மாஸ்கோ’ என்று பெயர் சூட்டுவதில் என்ன தவறு என்று பதிலளித்தவுடன், கேள்வி கேட்டவர்கள் வாயடைத்துப் போனார்கள்” என்பதும் பதிவு செய்யப்பட்ட வரலாறாகும்.

அண்ணாவைத் தொடர்ந்து, கழகத் தலைவராகவும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் பொதுவுடமைத் திட்டங்களான போக்குவரத்து துறை போன்ற தனியார் துறைகள் தேசியமயமாக்கப்பட்டது, நிலச் சீர்திருத்தம் அமல்படுத்தப்பட்டது, “குடிசை மாற்று வாரியங்கள்” “பெரியார் சமத்துவபுரங்கள்” என உருவாக்கப்பட்ட அனைத்தும் சட்டத்திற்குமுன் மட்டுமல்ல, வாழ்க்கை முறையிலும் சமத்துவத்தை நிலை நாட்டிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞருக்கு உண்டு என்பதை யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ இயலாது. பொதுவுடமைச் சித்தாந்தங்கள் மீது முத்தமிழறிஞர் கலைஞருக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. ஒரு முறை முரசொலியில் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் காரல் மார்க்ஸ் லெனின் ஸ்டாலின் ஆகிய மூன்று சோவியத் ரஷ்யாவின் கம்யூனிச கட்டமைப்பை உருவாக்கிய சிற்பிகளை மறக்கவியலாத ஒப்பீடுகளுடன் எடுத்துக்காட்டிய பாங்கும் பக்குவமும் இன்றல்ல, என்றும் மறக்க முடியாத சொற்கோவையாகும். அவர்களது கடிதத்தில்,


**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்




“மார்க்ஸ் ஓர் புத்தகம்,
லெனின் ஓர் நூலகம்,
ஸ்டாலின் ஓர் செயலகம்”,

என்று குறிப்பிட்டார். இது மட்டுமல்ல சோவியத் புரட்சிக்கு வித்திட்ட மக்சீம் கார்க்கி அவர்களின் “தாய்” என்ற நூலை அழகிய தமிழில் கவிதை நடையில் யாத்து வழங்கிய பெருமையும் புகழும் முத்தமிழறிஞர் கலைஞர்க்கு உண்டு. இன்றைய முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டியதும் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்ற செய்தி எண்ணி எண்ணி மகிழ்ந்து வியக்கத்தக்கச் செய்திகளாகும். தமிழ்நாட்டின் முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் கேரள மாநில முதல்வரை அழைக்கும் பொழுது எனது மூத்த சகோதரர் என்றுதான் பாசப்பிணைப் போடு, கருத்தரங்கத்தில் அழைத்தார். பொதுவுடமை இயக்கத்துடன் இணைந்து மாநில உரிமைகளைப் பாதுகாப்பதிலும், மாநிலங்களுக்கான அதிகாரங்களை மீட்டெடுப்பதிலும், ஒன்றிய அரசின் மதவாத அரசியலை எதிர்த்து சிறுபான்மை மக்களைப் பாதுகாப்பதிலும், அதற்கான போராட்டங்களை எதிர்கொள்வதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயார் என்பதை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இனி எதிர்வரும் காலங்களில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஒன்றிய அரசு “ஒரே நாடு ஒரே தேர்தல்”, அந்த ஒரே நாடு, “இந்துத்துவாக் கோட்பாட்டின்” அடிப்படையிலான “இந்துராஷ்ட்ரமாகத்” தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்துத்துவாக் கோட்பாடு என்பது முந்தைய சனாதன வைதீக மரபுகளின் மறுபதிப்புதான். இந்தியா என்பது பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு துணைக் கண்டம். அதனால்தான் இதுவரையிலும் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரு பொது மொழியை அடையாளம் காட்ட இயலவில்லை, இந்த நிலைமை இனியும் தொடரும் என்பதில் ஆச்சரியமில்லை. எனவே, இந்திய துணைக் கண்டம் சிதறுண்டு போகாமல் பாதுகாக்கும் சக்தியாகவும், ஜனநாயகத்தையும், சமதர்மத்தையும், மதச்சார்பின்மையையும் பாதுகாப்பதன் மூலம்தான் இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமையை பாதுகாக்க முடியும் என்பதையும், இந்த ஒற்றுமைக்கு அடித்தளமாகவும், அச்சாணியாகவும் உள்ள இந்திய அரசியல் சட்டத்தை காப்பாற்ற முடியும் என்பதையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய 24வது அகில இந்திய மாநாட்டின் கருத்தரங்கில் நிகழ்த்திய உரை, ஒன்றிய அரசிற்கு எச்சரிக்கை மணியாக அமையும் என்பதோடு, இது ஓர் ஜனநாயக, சமதர்ம, மதச்சார்பற்ற சக்திகளில் திருப்புமுனை கருத்தரங்கமாகவே கருதுவோம். ஆம்! இந்த சக்திகள் வெற்றி பெற்றிட அனைவரும் அணிவகுப்போம்.